தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதினேழாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து ஏழாவது அறிக்கை

கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்கள்

(மாவட்டப் பட்டியல்)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: – 8 MAY 2008)

8 MAY 2008

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து ஏழாவது அறிக்கை

கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்கள்

(மாவட்ட பட்டியல்)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

பக்கங்கள்

குழுவின் அமைப்பு .. iii

அறிக்கை

1. முகவுரை .. v

2. குழுவின் கூட்டங்கள் .. v

3. குழுவின் ஆய்வுப்பயணங்கள் .. vii-xxviii

3. பொதுக் குறிப்புரைகள் .. xxix

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

கிருஷ்ணகிரி மாவட்டம் .. 1–18

தருமபுரி மாவட்டம் .. 21–37

சேலம் மாவட்டம் .. 41–79

இணைப்பு–2

2. குழுவின் பரிந்துரை .. 80–82

இணைப்பு–

3. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் .. 83–84

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (வால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	:	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	:	துணைச் செயலாளர்
திரு. க. பாலசுப்ரமணியன்	:	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)
(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்து எழாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04, 05 மற்றும் 06 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஆய்வு பயணம் மேற்கொண்டது. அவ்வமயம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுகா, மத்தகிரி மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர் அரசு மருத்துவமனை, ஒசூர், உழவர் சந்தை, ஒசூர் ஊரக வர்த்தக அழைப்பு மையம் (கால் சென்டர்) சாணசத்திரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள், ஒசூர் புதிய பேருந்து நிலையம், ஒசூர் கெலவரப்பள்ளி அணைக்கட்டு, ஆயுதப்படை வளாகம், குந்தாரப்பள்ளி, புதிய மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம், கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மையம், கிருஷ்ணகிரி ஆவின் பால்பண்ணை, காவேரிப்பட்டினம் புறவழிச் சாலை, தருமபுரி மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி, தருமபுரி நெசவாளர் காலனியில் அமைக்கப்பட்டுவரும் பாதாள சாக்கடைத் திட்டம், நகராப் பேருந்து நிலையம், தருமபுரி, இண்டூர் ஆரம்ப சுகாதார நிலையம், இண்டூர் அமுதம் கூட்டுறவு நியாயவிலைக் கடை, இண்டூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டிடம், நாகதாசம்பட்டி பகுதி நேர நியாயவிலைக் கடை, அரசு மேனிலைப்பள்ளி, பி.அக்ரஹாரம், பெண்ணாகரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் காவலர் குடியிருப்பு, ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் – பிரதான நீர்த்தேக்கத் தொட்டி அமைவிடம், மடம், மீன் அருங்காட்சியகம், ஒகேனக்கல் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையம் ஒகேனக்கல், அதியமான் கோட்டம், தருமபுரி, சேலம், புதிய அரசினர் கூடுதல் சுற்றுலா மாளிகை, பாதாளச் சாக்கடைத் திட்டம், Super Specialty மருத்துவமனை, சேலம்

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கந்தம்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகம், சேலம் பால்பண்ணை, தாரமங்கலம் அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, தாரமங்கலம் 110/22 கி.வாட். துணை மின்நிலையம், மேட்டூர் 2–வது புதிய அனல் மின் நிலையம், மேட்டூர் மீன் குஞ்சு உற்பத்தி நிலையம், மேட்டூர் அணை, ஓமலூர் தாலுகா மருத்துவமனை, சேலம் தொழில் நுட்ப பூங்கா ஆகிய இடங்களை குழு பார்வையிட்டது.

3. மேற்காணும் மாவட்டங்களில் குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது பேரவையில் அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய 265 உறுதிமொழிகள் மீதான அறிக்கைகளை குழு ஆராய்ந்து அவற்றில் 61 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவாகவும், 7 உறுதிமொழிகளுக்கான பதில்களை படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும், 2 உறுதிமொழிகள் பரிந்துரை செய்யப்பெற்றனவாகவும், எஞ்சியுள்ள 195 உறுதிமொழிகள் மீது நடவடிக்கைத் தொடரலாம் என்றும் குழு முடிவு செய்யப்பெற்றது.

4. மேற்படி ஆய்வுப் பயணக்கூட்டங்களில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழுவின் பரிந்துரைகள் இணைப்பு–2 இல் உள்ளன. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–3–இல் உள்ளன.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்

5. கீழ்க்காணும் உறுதிமொழிகள் தொடர்பாக குழு 2007–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04, 05 மற்றும் 06 ஆகிய நாட்களில் கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் செய்து உறுதிமொழிகள் நிறைவேற்றப்பெற்றனவா என்று பார்வையிட்டதுடன் அவ்வுறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியது. குழு நேரடியாக பார்வையிட்ட சில உறுதிமொழிகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:–

1. உறுதிமொழி எண். 887 / 2006:– "கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தொகுதி மத்தகிரி மாவட்ட கால்நடை பண்ணையில் பசுந்தீவனம் பற்றாக்குறை உள்ள காலங்களில் பயன்படுத்திட சைலோ உரக்குழிகள் அமைப்பது குறித்து."

ஒசூரிலுள்ள, மத்தகிரி மாவட்ட கால்நடைப் பண்ணையை பார்வையிடச் சென்றடைந்த குழுவினரை கால்நடை பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்கள் வரவேற்று அந்த கால்நடைப் பண்ணையில் பசுந்தீவனம் பற்றாக்குறை உள்ள காலங்களில் பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள சைலோ உரக்குழிகள் குறித்து குழுவிற்கு விளக்கினார்கள்.

தற்போது குழிகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன, என்றும் அக்குழிக்குள் அதற்கான இடுப்பொருட்களை இட்டு குழிகளை பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அதிகாரிகளுக்கு குழு உத்தரவிட்டது.

இந்த கால்நடைப் பண்ணை சுமார் 1600 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது என்றும், இப்பண்ணையில் ஏராளமான இடங்கள் பயன்படுத்தப்படாமல் முட்புதர்கள் மண்டி கிடக்கின்றன எனவே காலியாக உள்ள இடங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கும் பல்வேறு விதமான ஆராய்ச்சிகளுக்கு

பயன்படுத்துவதற்கும் துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு வலியுறுத்துகிறது.

பின்னர் குழு அந்த கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டுவரும் குதிரைகள் மற்றும் மாடுகள் வளர்க்கும் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டது. அங்குள்ள குதிரைப் பண்ணையில் பிறந்து ஒருவார காலமாகிய குதிரை கன்றுக்கு குழுத்தலைவர் அவர்கள் "கயல்விழி" என்று பெயர் சூட்டினார்.

குழு அங்குள்ள உறைவிந்து நிலையத்தைப் பார்வையிடச் சென்றது. இந்த கால்நடைப் பண்ணையில் வளர்க்கப்படும் காங்கேயம் இனப்பசுக்களின் விந்துகள் சேகரிக்கப்பட்டு, அவை Liquid Nitrogen-னுள் வைக்கப்பட்டு தமிழகத்திலுள்ள அனைத்து கால்நடைப் பண்ணைகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன என்று குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

2. உறுதிமொழி எண். 909 / 2003:- "கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தொகுதி, கெலவரப்பள்ளி அணைக்கட்டு மூலம் 8000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதால் அதன் கால்வாய்களைச் செப்பனிடுதல் மற்றும் தூர் வாருதல் குறித்து."

ஒசூர் தொகுதியில் அமைந்துள்ள கெலவரப்பள்ளி அணைக்கட்டு பகுதியைப் பார்வையிடச் சென்ற குழுவினரை பொதுப்பணித் துறையின் மேற்பார்வைப் பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) திரு. பாண்டியன் அவர்களும், செயற்பொறியாளர் திரு. கண்ணன் அவர்களும், வரவேற்று திட்டப் பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினார்கள்.

கால்வாய்கள் புனரமைப்பு பணிகளுக்காக 1 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு பாசனம் நடைபெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் 9083 ஏக்கர் பயனடைகிறது என்றும் துறை

அதிகாரிகள் குழுவிற்கு தெரிவித்தனர். இங்குள்ள பொழுதுபோக்கு பூங்கா நல்லமுறையில் பராமரிக்கப்பட வேண்டுமென்றும், கால்வாய்கள் புனரமைப்பு செய்யப்பட்டாலும், ஒரு சில இடங்களில் தூர்வாரப்படாத நிலை உள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தன் அடிப்படையில், அந்தப் பணிகளையும் விரைவில் செய்து முடிக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது.

கர்நாடகத்திலுள்ள சில ஆலைகளின் கழிவுகள் இந்த ஆற்று நீருடன் நேரிடையாக கலந்துவிடுவதால் கழிவுநீர் இந்த அணையில் வந்து சேர்வதை குழு பார்வையிட்டது. இதனால் அணையின் நீர் மாசு கலந்த நீராக மாறுகிறது. இதனை தடுக்க பொதுப்பணித் துறையின் அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோர் அம்மாநிலத்திற்கு கடிதம் வாயிலாகவும் அம்மாநிலத்திற்கு செல்லும்போது இதுபற்றி அம்மாநில அரசுக்கு எடுத்துக்கூற வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொள்வதோடு சென்னையில் கூட்டம் நடைபெறுகிறபோது பொதுப்பணித் துறையின் செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளை அழைத்து இது குறித்து ஆய்வுச் செய்யும் என்று குழுத் தலைவர் தெரிவித்தார்.

3. உறுதிமொழி எண். 1164 / 2006:– "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதங்களை வைக்கும் பாதுகாப்பு அறையும், ஆயுதப்படை வளாகமும் அமைக்கப்படுவது குறித்து".

கிருஷ்ணகிரி மாவட்டம், குந்தாரப்பள்ளியில் அமைந்துள்ள ஆயுதப்படை வளாகத்தை பார்வையிடச் சென்ற குழுவினரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி. தேன்மொழி மற்றும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் உதவி செயற்பொறியாளர் திரு. மலைச்சாமி மற்றும் ஒப்பந்ததாரர் ஆகியோர் வரவேற்று திட்டப்பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதங்களை வைக்கும் பாதுகாப்பு அறையும், ஆயுதப்படை வளாகமும் ரூபாய் ஒரு கோடி செலவில் கட்டப்படும் என்ற உறுதிமொழிக்கிணங்க 25 ஏக்கர் பரப்பளவில் ஆயுதப்படை வளாகம் அமைக்கும் பணியை குழு பார்வையிட்டது. இப்பணிகள் 28.06.2007 அன்று தொடங்கப்பட்டு

27.04.2008 அன்று முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், ஆயுதப்படை வளாகத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணியையும் செய்து முடிக்க வேண்டுமென்று குழு அறிவுறுத்துகிறது.

4. உறுதிமொழி எண். 259 / 2005 மற்றும் 261 / 2006 :– "கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்து".

கிருஷ்ணகிரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை பார்வையிடச் சென்ற குழுவினரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., மற்றும் பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் திரு.சண்முகம் ஆகியோர் வரவேற்று திட்டப்பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கமளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பெருந்திட்ட வளாகத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்ட குழு இப்புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகமானது இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு நவீன தொழில்நுட்பத்துடனும், தனியார் நிறுவனங்களுக்கு சவால் விடும் அளவிற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அறை, மாவட்ட வருவாய் அதிகாரி அறை, திட்ட அலுவலர் அறை, வீடியோ கான்பிரன்ஸிங் உள்ளிட்ட அனைத்து பகுதியையும் குழு பார்வையிட்டது. ஒவ்வொரு பணியாளர்களுக்கும் பேப்பர் ஒர்க் இல்லாமல் கம்யூட்டர் வசதி செய்து தரப்பட உள்ளதாகவும், வரவேற்பு அறையில் கணினிகள் அமைக்கப்பட்டு கொடுக்கப்பெறும் மனுக்களுக்கு உடனுக்குடன் ஒப்பளிப்பு வழங்கப்படும் என்றும், இதனால் மனு கிடைக்கப்பெறவில்லையே என்பது போன்ற பிரச்சினைகள் உருவாகாது என்றும், E- District என்ற முறையில் கணினி மூலமாகவே செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும், தலை சிறந்த தொழில்நுட்பத்துடன் மிகச் சிறந்த முறையில் கட்டப்பட்டிருக்கிற இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் பொதுமக்களுக்கு மிகுந்த பயன்களை ஏற்படுத்தும் என்றார். மேலும் 11.73 கோடியில் நவீன மேசை, நாற்காலிகள் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் பிற அலுவலகங்கள் கட்டுவதற்கு முன்னுரிமை அளித்து இந்தப் பணிகளையும் செய்வதற்கு அரசு நிதி ஒதுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது. சென்னையில் குழுக்கூட்டம் நடைபெறுகிற போது சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளோடு குழு இது குறித்து ஆய்வு செய்யும்.

5. உறுதிமொழி எண். 377 / 2006 :– "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நீச்சல் குளம் ஒன்று புதியதாக அமைக்கப்படுவது குறித்து".

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மையத்தினை பார்வையிடச் சென்ற குழுவினரை மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.செல்வகுமார் வரவேற்று மாவட்ட விளையாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளை காண்பித்து அதுகுறித்து விளக்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளம் கட்டும் பணி, உடற்பயிற்சி கூடம், விளையாட்டு உள் அரங்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை குழு பார்வையிட்டது. பெரிய தொழில் அதிபர்களிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நன்கொடைப் பெற்று அதனை வங்கிகளில் வைப்பீடு செய்வதன்மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையை வைத்து விளையாட்டு வளாகம் மேம்படுத்தப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். சிறப்பாக இவ்விளையாட்டு மையம் திகழ்வதற்கு காரணமான மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர் உள்ளிட்ட அலுவலர்களை குழு பாராட்டுகிறது என்றும், நீச்சல் குளம் கட்டும் பணியைப் பொறுத்தவரையில் 70 சதவிகித பணிகள் முடிவுற்றன என்றும் எஞ்சிய 30 சதவிகித பணிகள் 2 மாத காலத்திற்குள் முடிக்கப்பெறும் என குழுவிற்கு தெரிவித்தனர். பணி முடிக்கப்பட்டு குழுவிற்கு அறிக்கை அனுப்பப்படும் வரை இந்த உறுதிமொழியை நிலுவையில் வைக்கலாம் என குழு முடிவு செய்தது.

6. உறுதிமொழி எண். 337 / 2004 :– "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை 7–ல் புறவழிச்சாலை அமைத்தல் குறித்து".

காவேரிப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை 7–ல் புறவழிச்சாலை அமைக்கும் பணியை பார்வையிடச் சென்ற குழுவினரை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மேலாளர் திரு.ரவி சுதாகர் மற்றும் எல்&டி திட்ட அலுவலர் திரு.ஷாஜி, ஆகியோர் வரவேற்று சாலைப்பணி குறித்து குழுவிற்கு விளக்கினார்கள்.

தேசிய நெடுஞ்சாலை 7–ல் புறவழிச்சாலையில் அமைக்கும் பணி நடைபெறும் இடத்தினை குழு பார்வையிட்டது. கிருஷ்ணகிரி முதல் தருமபுரி முடியவுள்ள சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், இதன் மொத்த தூரம் கி.மீ.62 ஆகும். அதில் கிருஷ்ணகிரியில் மட்டும் 19 கி.மீ. சாலைப்பணிகள் நடைபெறுகிறது என்றும் இதற்கான மதிப்பீடு ரூ.372.5 கோடியாகும். இப்பணியை டிசம்பர் 2008–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தாலும், திட்டக் காலத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே பணி முடிக்கப்பெறும் என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. பணியை முடித்துவிட்டு குழுவிற்கு அறிக்கை அனுப்பப்படும் வரை இந்த உறுதிமொழியை நிலுவையில் வைக்கலாம் என குழு முடிவு செய்தது.

7. உறுதிமொழி எண். 80 / 2002 :– "கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் ரூ.4.10 கோடி கடன் TUFIDCO மூலம் பெறப்பட்டு கட்டுதல் குறித்து".

கிருஷ்ணகிரியிலுள்ள புதிய பேருந்து நிலையத்தைப் பார்வையிடச் சென்ற குழுவினரை தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.மூர்த்தி, நகராட்சி ஆணையர் திரு.குப்பமுத்து மற்றும் நகராட்சி பொறியாளர் திரு.இராஜேந்திரன், ஆகியோர் வரவேற்று திட்டப்பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினர்.

கிருஷ்ணகிரி சின்ன எரியில் புதிய பேருந்து நிலையமானது டுபிட்கோ கடனாக ரூ.378 இலட்சமும், ஐ.டி.எஸ்.எம்.டி. கடன் ரூ.200 இலட்சமும் மற்றும் நகராட்சி நிதியாக ரூ.100 இலட்சமும் சேர்த்து ரூ.678 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது என்றும், 6.10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இப்பேருந்து நிலையத்தில் 314 பேருந்துகள் தினந்தோறும் வந்து செல்லும் என்றும், தற்போது 80% பணிகள் முடிந்துள்ளன என்றும், 21 கடைகளைக் கொண்ட வணிகவளாகம், உணவு விடுதி, ஓட்டுநர் ஓய்வு அறை, உடல் ஊனமுற்றோர் ஓய்வு அறை, முன்பதிவு செய்யும் அறை, பயணிகள் ஓய்வு அறை, பொருள் பாதுகாப்பு அறை இதைத்தவிர பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில் 2,486 ச.மீட்டரில் புல்வெளியுடன் கூடிய சிறுவர் பூங்கா கட்டப்பட்டு வருவதாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்திற்கு வரும் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர

வேண்டும் என்றும் பேருந்து நிலையத்தில் 39 சோடியம் மின் விளக்குகளும் ஒரு ஹை–மாஸ் விளக்கும் அமைக்கப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டதில் சோடியம் விளக்குகளில் மஞ்சள் நிறம் பல்புகளுக்குப் பதிலாக வெள்ளை நிற பல்புகள் பொருத்த நகராட்சி ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், துப்பரவு பணிக்கான ஒப்பந்தத்தை தனியாருக்கு வழங்குவதற்குப் பதிலாக சுய உதவிக்குழு பெண்களுக்கு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொண்டது.

8. உறுதிமொழி எண். 151 / 1996, 517 / 1998, 783 / 1998, 257 / 2002 மற்றும் 439 / 2005 :– "தருமபுரியில் அதியமான் கோட்டம் அமைத்தல் குறித்து".

தருமபுரியில் அதியமான் கோட்டை கிராமத்தில் வள்ளல் அதியமானுக்கு கோட்டம் கட்டும் பணிகளை பார்வையிட வந்த குழுவினரை பொதுப்பணித் துறையின் உதவி செயற்பொறியாளர் திரு.சண்முகம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் வரவேற்று அதியமான் கோட்டத்தின் கட்டுமான பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினார்கள்.

வள்ளல் அதியமான் பிறந்த ஊரான அதியமான் கோட்டை கிராமத்தில் கோட்டம் கட்டும் பணிகளை குழு பார்வையிட்டது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.115 இலட்சம் என்றும் இப்பணிகள் அனைத்தும் மார்ச் 2008–க்குள் முடிவடைந்து விடும் என்றும் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. பணிகள் முடிவடைந்து பொது மக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்ட பின்பு அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனுப்பி வைக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொண்டது.

"இந்தக் கோட்டத்தின் முகப்பில் வைக்கப்படவிருக்கும் வள்ளல் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுக்கும் காட்சியை சித்தரிக்கும் சிலையின் மாதிரி குழுவிற்கு காட்டப்பட்டது." இச்சிலையின் மாதிரி சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது என்று குழு தெரிவித்தது. மேலும், சங்ககால வரலாற்றை நன்கு ஆய்வு செய்து அதற்கேற்ப அதியமான் மற்றும் ஔவையார் ஆகியோரின் சிலையின் தோற்றங்கள் வடிவமைக்கப்பட வேண்டுமென்று குழு அறிவுறுத்தியது.

9. உறுதிமொழி எண். 313 / 1998 :– "ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் மற்றும் பொது சுகாதாரத் திட்டம் செயல்படுத்துதல் குறித்து".

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் பிரதான நீர்த்தேக்கத் தொட்டி அமைவிடமான மடம் பகுதிக்கு வந்தடைந்த குழுவினரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் திரு.கோபிநாத் அவர்களும், செயற்பொறியாளர் திரு.வீராராஜ் அவர்களும் குழுவை வரவேற்று திட்டப் பணிகள் குறித்து விளக்கினர்.

"பூலோரைடால்" பாதிக்கப்பட்ட தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாட்டங்களுக்கு காவிரி ஆற்றில் ஒகேனக்கல் அருகில் குடிநீர் எடுத்து மக்களுக்கு வழங்கிட ரூ.1,334 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றும் இதன் மூலம் 6,755 குடியிருப்புகள் பயன்பெற உள்ளன என்றும் குழுத் தலைவர் தெரிவித்தார். 2036 ஆம் ஆண்டு 40 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தொலைநோக்குப் பார்வையில் இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்றும் இன்னும் 3 ஆண்டுகளில் இத்திட்டத்தை முடித்து இப்பகுதியிலுள்ள மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்க முயற்சி எடுத்துள்ள அதிகாரிகளுக்கு குழு தனது பாராட்டுதல்களை தெரிவித்து கொள்கிறது என்றார்.

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரும்பாடுபட்டு வரும் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழக அரசின் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் குழு தனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறது என்று குழுத் தலைவர் தெரிவித்தார்.

10. உறுதிமொழி எண். 1147 / 2006 :– "தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் அரூர் ஆகிய நகரங்களில் காவல் துறைக்கு அலுவலகமும், குடியிருப்பும் சேர்ந்த கட்டிடங்கள் கட்டுவது குறித்து".

பெண்ணாகரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம், மற்றும் குடியிருப்பும் கட்டப்படும் இடத்தை சென்றடைந்த குழுவினரை காவல்துறை துணை கண்காணிப்பாளர் திரு. கிருஷ்ணன் அவர்களும், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் உதவி செயற்பொறியாளர் திரு. திருமலை அவர்களும் வரவேற்று திட்டப்பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினர்:–

காவலர்களுக்கான குடியிருப்பு கட்டும் பணியை பார்வையிட்ட குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம், குடியிருப்பு கட்டும் பணிக்கான மதிப்பீடு ரூ.14 இலட்சத்து 87 ஆயிரம். தற்போது 80% பணிகள் முடிவுற்றுள்ளதாகவும், 14.09.2007 இல் தொடக்கப்பட்ட இப்பணி 13.03.2008 இல் முடிவுறும் என தெரிவிக்கப்பட்டது. காவல்துறை துணை கண்காணிப்பாளர் அவர்கள் இந்த கட்டிடத்தில் உள்ள முதல் தளத்தில் அறைகள் இல்லையென்றும், அலுவலகத்திற்கு வருகின்ற காவல்துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு போதுமான அறைகள் இல்லையென்றும் எனவே, 2000 சதுர அடியில் இந்த அலுவலகத்தை விரிவுப்படுத்துவதற்காக 5 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கி அந்த அலுவலகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறது என்றும், தரமான செங்கற்களை வைத்துச் சிறப்பாகக் கட்டப்பட வேண்டுமென்று குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டது.

11. உறுதிமொழி எண். 411 / 2006 :- "தருமபுரியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்து".

பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வரும் நெசவாளர் காலனிக்கு சென்றடைந்த குழுவினை பொதுப்பணித் துறையின் உதவி செயற்பொறியாளர் திரு.எம்.குலாமுதீன், அவர்கள் வரவேற்று திட்டப்பணிகள் குறித்து விளக்கினார்.

பாதாள சாக்கடை திட்டத்தினை பார்வையிட்ட குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

ரூ.16.53 கோடி மதிப்பீட்டில் தருமபுரியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்றும், 35 கி.மீ. தூரத்திற்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் 29.11.2007 முதல் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும், இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 18 மாதங்கள் அதாவது மே 2009இல் பணிகளை முடிக்க திட்டமிட்டு இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தொலைநோக்குப் பார்வையுடன் 30 ஆண்டுகளுக்கு பின் உயரும் மக்கள் தொகை கணக்கில் கொண்டு பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் குழாய்கள் தரம் வாய்ந்தவை என்றும் குழாய்க்குள் முழு அளவிற்கு அழுத்தம் செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்ட பின்னரே மணல் இட்டு குழிகள் நிரப்பப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டப் பணிகளை முழுமையாக முடித்துவிட்டு அது குறித்து அறிக்கை குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அதுவரை இந்த உறுதிமொழியினை நிலுவையில் வைக்கலாமென குழு முடிவு செய்தது.

12. உறுதிமொழி எண். 612 / 2006 :– "எய்ட்ஸ் நோயாளிகளுக்கு கூட்டுமருந்து சிகிச்சை மையம் தருமபுரியில் ஏற்படுத்துதல் குறித்து".

தருமபுரி மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியைப் பார்வையிடச் சென்ற குழுவினரை மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் இணை இயக்குநர், சுகாதார பணிகள் உள்ளிட்ட அலுவலர்கள் வரவேற்றனர்.

பின்னர் குழு மருத்துவமனையின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று பார்வையிட்டது. குழு பார்வையிடுதலுக்குப் பின் குழுத் தலைவர் பின்வருமாறு தெரிவித்தார்.

இந்த மருத்துவமனையை பொருத்தவரையில் உட்புறத்தில் சுத்தமாகவும், சுகாதாரமான முறையில் பராமரித்து வருகின்றனர் என்றும், ஆனால், வெளிப்புறத்தில் நோயாளிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் குப்பைகளையும், கழிவுகளையும் ஆங்காங்கே கொட்டி வைக்கப்பட்டு சுகாதார கேடு நிறைந்துள்ளதாக காண நேரிடுகிறது என்றும், நகராட்சியில் உள்ள துப்புரவு பணியாளர்களைக் கொண்டு நாளையதினம் ஒரு மாஸ் கிளினிங்–க்கு ஏற்பாடு செய்து குப்பைகளையும், கழிவுகளையும் அகற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக சுகாதாரத்துறையின் இணை இயக்குநர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு கேட்டுக்கொள்கிறது. குப்பைகளை அகற்றுவதற்கு முன்பாக ஒரு புகைப்படமும், அகற்றியபின் ஒரு புகைப்படமும் எடுத்து சேலம் மாவட்டத்தில் குழு தனது ஆய்வுப் பயணத்தை முடித்துவிட்டு செல்வதற்குள் கொண்டுவந்து காண்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த மருத்துவமனையிலுள்ள எய்ட்ஸ் நோயாளிகளுக்கு கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கும் மையத்தினை பார்வையிட்ட குழு 2000 நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 20 சதவீதத்தினர் ஆண்கள் என்றும் மற்றவர்கள் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தொடர்ந்து கூட்டுமருந்து சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

இந்த மருத்துவமனைக்கு அருகில் 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை கட்டிடம் புதியதாக கட்டப்பட்டு வருவதை பார்வையிட்ட குழு இங்கு பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள் தரம் குறைந்தவையாக இருந்ததை குழு கண்டறிந்தது. தரமற்ற செங்கற்களை மாற்றிவிட்டு தரமான செங்கற்களைக் கொண்டு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இன்று மாலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் இத்தகவலை தெரிவிக்க வேண்டுமென்று பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் அவர்களுக்கு குழு உத்தரவிட்டது. அதேபோன்று இம்மருத்துவமனையில் சில மின் விளக்குகள் எரியாமலும், மின் விசிறிகள் இயங்காமல் உள்ளதை உடனடியாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுப்பணித் துறையின் நிர்வாகப் பொறியாளர் (மின்சாரம்) அவர்களுக்கு குழு உத்தரவிட்டது.

13. உறுதிமொழி எண். 789 / 2006 :– "ஒகேனக்கல்லில் வண்ண மீன் காட்சியகம் அமைப்பது தொடர்பாக".

ஒகேனக்கல்லில் மீன் அருங்காட்சியத்திற்காக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை பார்வையிட வந்த குழுவினரை மீன்வளத்துறையின் உதவி இயக்குநர் திரு.ஆர். சக்திவேல் அவர்களும், பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளர் திரு. சண்முகம் அவர்களும் வரவேற்று கட்டிடத்தின் கட்டுமான பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினர்.

மீன் அருங்காட்சியத்திற்கான கட்டப்பட்டு வரும் கட்டிடத்தைப் பார்வையிட்ட குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்:–

மீன் காட்சியகம் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் ஏறக்குறைய 80% பணிகள் முடிவடைந்து உள்ளன என்றும், 18.03.2008 இல் முடிக்க திட்டமிட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடத்தில் பயன்படுத்தப்படும் மின் சாதனங்கள் தரமானதாக இருக்க வேண்டும். மேலும், கட்டிடத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைப்பதற்கு தேவையான மதிப்பீடுகள் தயார் செய்து அதற்கான நிதியைப் பெற்று சுற்றுச்சுவர் அமைக்கப்பட வேண்டும் என்று குழு

பரிந்துரை செய்கிறது. மீன் அருங்காட்சியகத்தை பார்ப்பதற்கான கட்டணம் ரூ.3 ஆக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், சில்லரை பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க 2 அல்லது 5 ரூபாய் என்று கட்டணம் நிர்ணயம் செய்ய உத்தேசித்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பணி முடிக்கப்பட்டதற்கான அறிக்கையை குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்றும், அதுவரை இந்த உறுதிமொழியை நிலுவையில் வைக்கலாமென்று குழு முடிவு செய்தது.

14. உறுதிமொழி எண். 878 / 2006 :– "சேலம் மாவட்டம் ஓமலூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் பணியினை விரைவுப்படுத்துவது குறித்து".

ஓமலூர் அரசு மருத்துவமனையை பார்வையிடச் சென்ற குழுவினரை முதன்மை மருத்துவ அதிகாரி திரு. சம்பத்குமார் அவர்கள் வரவேற்று மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளை சுற்றிக் காண்பித்து மருத்துவமனை குறித்து உரிய விளக்கங்களை குழுவிற்கு அளித்தார்.

மருத்துவமனையை பார்வையிட்ட குழுத் தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார்.

41 படுக்கை வசதி கொண்ட ஓமலூர் அரசு மருத்துவமனையின் பல்வேறு இடங்களில் மெத்தை, தலையணை மிகவும் மோசமான நிலையில் உள்ளதை குழு கண்டறிந்து மத்திய சுகாதார அமைச்சகம் நோயாளிகள் நல நிதியிலிருந்து 2007–2008 ஆம் ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டும் மெத்தைகள், தலையணைகள் மாற்றப்படாமலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளப்படாமலும் 91 ஆயிரம் ரூபாய் செலவு செய்யாமல் வைத்திருப்பது குறித்து குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவை உடனடியாக கூட்டி இந்த நிதியைக் கொண்டு மருத்துவமனையில் சுகாதாரம் பேணப்பட வேண்டுமென்று முதன்மை மருத்துவ அலுவலர்கள் அவர்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் குழு கேட்டுக்கொள்கிறது என்றும், துப்புரவு பணியாளர்களைக் கொண்டு மாஸ்–கிளினிங் செய்து மருத்துவமனையை சுத்தமாக

வைக்குமாறும், மருத்துவமனைக்கு சொந்தமான ஆம்புலென்ஸ் ஒட்டுநர்களையும் நியமிக்க வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொள்கிறது. மேலும் இம்மருத்துவமனையில் 1.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு திறக்கப்படாமல் உள்ளதைக் குழு கண்டறிந்தது. போதிய மருத்துவர்கள் மற்றும் உபகரணங்கள் இல்லாததால் இப்பிரிவினை திறக்கப்படவில்லையென முதன்மை மருத்துவர் தெரிவித்தார், போதிய உபகரணங்கள் மற்றும் மருத்துவர்களை உடனடியாக வழங்கி இப்பிரிவை சிறப்பாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அரசுக்கு குழு பரிந்துரை செய்கிறது. மேலும், உபகரணங்கள், மருத்துவர்கள் வரும் வரை காத்திராமல் இருக்கிற மருத்துவர்களைக் கொண்டு இக்கட்டிடத்தை நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்த வேண்டுமென்றும் குழு கேட்டுக்கொள்கிறது.

15. உறுதிமொழி எண். 347 / 2006 :– "சேலம் அரசு பொறியியற் கல்லூரி, பல்கலைக்கழகத்திற்கு முன்பாக உள்ள 4.00 ஏக்கர் நிலம் தனியார் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதை மீண்டும் கையகப்படுத்துவது குறித்து".

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்திற்கு எதிரே உள்ள நிலம் ஓமலூர் வட்டம் "அருள்மிகு சென்றாய பெருமாள்" கோயிலுக்குச் சொந்தமானது என்றும், அந்த நிலத்தை தற்போது தனியார் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ. தமிழரசு அவர்களும், அங்குள்ள பொதுமக்களும் குழுவிடம் தெரிவித்தனர். இது குறித்து குழுவுடன் வந்திருந்த வீட்டுவசதி வாரிய அலுவலர்களிடம் கேட்டு அறிந்ததில் அந்த இடம் வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இடம் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமானதா அல்லது வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமானதா என்பதை கண்டறிவதுடன் அரசுக்கு சொந்தமான இடமாக இருந்து தனியார் ஆக்கிரமித்திருந்தால் அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது. மேலும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

16. உறுதிமொழி எண். 960 / 2006, 544 / 2007 மற்றும் 1061 / 2007 :-

"சேலம் மாவட்டம், சேலம் வட்டம் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்கா நிறுவப்படுவது குறித்து".

சேலம் ஜாகீர் அம்மாபாளையத்தில் அமையவிருக்கும் தகவல் தொழில்நுட்ப பூங்காவினை பார்வையிடச் சென்ற குழுவினை தகவல் தொழில்நுட்பத் துறையின் தொழில் அபிவிருத்தி மேலாளர் (Business Development Manager) வரவேற்றார். அவ்விடத்தை பார்வையிட்ட குழு கீழ்க்கண்டவாறு தெரிவித்தது.

சேலம், ஜாகீர் அம்மாபாளையத்தில் 164 எக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும், எல்காட் மேலாண்மை இயக்குநர் அவர்களின் அறிவுரைப்படி 21.01.2008 அன்று சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த தொழில்நுட்ப கல்லூரி முதல்வர்கள் மற்றும் தொழில்நுட்ப சம்பந்தப்பட்ட நிபுணர்களுடன் கலந்தாய்வு முதற்கட்டம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன்னிலையில் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இங்குள்ள கல்குவாரியிலிருந்து லாரிகள் மூலம் சட்டவிரோதமாக கற்கள் எடுத்துச் செல்லப்படுவதாக குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நிலம் எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளதால் கண்காணிப்பு பணியை எல்காட் நிறுவனம்தான் மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிற காரணத்தால் எல்காட் நிறுவனம் செய்யூரிட்டிகளை நியமித்து சட்டவிரோதமாக கற்களை எடுத்துச் செல்லப்படுவதை கண்காணிக்க குழு கேட்டுக்கொள்கிறது என்றார்.

17. உறுதிமொழி எண். 308 / 2002, 544 / 2006, 576 / 2006, 607 / 2006, 679 / 2006 :- "சேலத்திலுள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் புற்று நோய் சிகிச்சை பிரிவுக்கு கோபால்ட் தெரப்பி வழங்குதல் குறித்து".

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பார்வையிட்ச் சென்ற குழுவினரை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் சண்முகம் மற்றும் சுகாதாரத் துறையின் இணை இயக்குநர் டாக்டர் அருணகிரி உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோர் வரவேற்று மருத்துவமனையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் அழைத்துச் சென்று மருத்துவமனையின் பணிகள் குறித்து கீழ்க்கண்டவாறு விளக்கினார்கள்.

இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை மைய அரசின் உதவியோடு புதுதில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகத்திற்கு இணையாக தரம் உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து குழு வினவியபோது தற்போது 10 சிறப்பு மருத்துவ துறைகளை மேம்படுத்த மத்திய அரசின் பங்களிப்பாக 100 கோடி ரூபாயும், மாநில அரசின் பங்களிப்பாக 20 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்காக கட்டுமான பணிகள் மத்திய அரசு நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைக்கப்பட்டது என்றும், 01.01.2008 முதல் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்றும், மருத்துவமனையின் முதல்வர் குழுவிற்கு தெரிவித்தார்.

பின்னர் குழு புற்று நோய் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் மருத்துவ சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, எய்ட்ஸ் நோய்க்கான சிகிச்சைப் பிரிவு, மனநல சிகிச்சைப் பிரிவு, இருதய நோய் சிகிச்சைப் பிரிவு, பிரசவ வார்டு, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டதுடன் அங்கு காணப்பட்ட சிற்சில குறைபாடுகளை நிவிர்த்தி செய்யுமாறு மருத்துவமனையின் அதிகாரிகளை குழு கேட்டுக்கொண்டது. மேலும், இம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுடன் வருபவர்கள் தங்குவதற்காக கூடம் உள்ள

இடத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தொட்டி மிகவும் சிறிதாக இருந்ததால் குழுக்கூட்ட நாளன்று மாலைக்குள் கூடுதலாக ஒரு தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்துதர மாநகராட்சி ஆணையர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு உத்தரவிட்டது. குழுவின் உத்தரவுப்படி கூடுதலாக ஒரு குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட்டதற்கான புகைப்படத்தை அன்று மாலை நடைபெற்ற குழுக்கூட்டத்தில் காண்பிக்கப்பட்டது.

18. உறுதிமொழி எண். 91 / 2003, :- "சேலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு (மேற்கு) சொந்தக் கட்டிடம் கட்டுவது குறித்து".

சேலம் கந்தம்பட்டி என்ற இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்காக கட்டப்பட்டு வரும் கட்டிடப் பணிகளை பார்வையிடச் சென்ற குழுவினரை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு. குணசேகரன் மற்றும் பொதுப்பணித்துறையின் உதவி செயற்பொறியாளர் திரு. ஆசைத்தம்பி உள்ளிட்ட அலுவலர்கள் வரவேற்று கட்டுமானப் பணிகள் குறித்து குழுவிற்கு விளக்கினர்.

கட்டிடப் பணியைப் பார்வையிட்ட குழு பின்வருமாறு தெரிவித்தது.

சேலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்காக கட்டப்பட்டு வரும் கட்டிடப் பணி 1 1/2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3.82 ஏக்கர் பரப்பளவில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும், தற்போது 80% பணிகள் முடிவுற்றுள்ள என்றும் 30.06.2008–க்குள் பணிகள் அனைத்தும் முடிவடைந்து விடும் என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. கட்டிடப்பணிகள் நேர்த்தியாகவும், தரம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளதை குழு கண்டறிந்து, இதற்குப் பொறுப்பான பொதுப்பணித் துறையின் கண்காணிப்பு பொறியாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்து கொண்டது. கட்டுமானப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டவுடன் அறிக்கை ஒன்றை குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அதுவரை இவ்வுறுதிமொழி நிலுவையில் வைக்கலாம் என குழு முடிவு செய்துள்ளது.

19. உறுதிமொழி எண். 776 / 2006, :- "சேலத்தில் உள்ள பால் பண்ணையில் இருந்து மிக உயர் வெப்ப நிலையில் பால் பதப்படுத்தி, பாக்டீரியா போன்ற நுண் கிருமிகளை தவிர்க்க, நிலைகெடா சிப்பம் கட்டும் நிலையம் உலகத்தர அளவில் நவீனப்படுத்தி பால் ஏற்றுமதிக்கு வழிவகை செய்யப்படுவது குறித்து".

சேலம் பால்பண்ணையை பார்வையிடச் சென்ற குழுவினரை சேலம் பால் பண்ணையின் பொது மேலாளர் திரு.பி. சர்வேஸ்வரன், உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்று பால் பண்ணையின் பல்வேறு பிரிவுகளுக்கு அழைத்துச் சென்று, காண்பித்து கீழ்க்கண்ட தகவல்கள் குழுவிற்கு தரப்பட்டன.

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 1978 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது என்றும், பாலின் உபபொருள்களுக்கான வெண்ணெய், நெய், பால்பவுடர் ஆகியவை 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றும் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் இப்பால்பண்ணை அமைந்துள்ளது என்றும் இந்த ஒன்றியத்தின் கீழ் 1032 கூட்டுறவு சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு 3.75 முதல் 4 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது என்றும், சேலம், சங்ககிரி, மேட்டூர், ஆத்தூர், நாமக்கல், பரமத்திவேலூர், இராசிபுரம் மற்றும் வாழப்பாடியில் அமைந்துள்ள பால் சேகரிப்பு குழு அலுவலகம் மூலம் பால் கொள்முதல் செய்யப்படுகிறது என்றும், இவ்வாறு சேகரிக்கப்படும் பால் நாமக்கல், ஆத்தூர் மற்றும் பரமத்திவேலூரில் உள்ள குளிரூட்டும் நிலையங்களில் குளிர்விக்கப்பட்டு அதன்பின்னர் சேலத்திலுள்ள பால் சமநிலைப்படுத்தும் ஆலைக்கு கொண்டுவரப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

ஒன்றியத்தின் கீழுள்ள சங்கங்களில் மொத்த உறுப்பினர்கள் 3,20,207 பேர் ஆகும். வாரத்துக்கு ஒருமுறை பால் உற்பத்தியாளர்களுக்கு சங்கங்களிலிருந்து பாலுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது என்றும், சுமார் 1 இலட்சம் லிட்டர் பால் சென்னைக்கும் அனுப்பப்படுகிறது என்றும், 1 இலட்சத்து 10 ஆயிரம் லிட்டர் பால் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் விற்கப்படுகிறது என்றும், பால்பவுடர் தயார் செய்யும் இயந்திரமும் இந்த பால் பண்ணையில் உள்ளது. இப்பண்ணையில் பாலை

பதப்படுத்த ஸ்டெரிலைசேஷன் என்ற முறை கடைபிடிக்கப்படுகிறது என்றும், அதன்படி பால் 154 டிகிரி வெப்பத்திற்கு 2 வினாடிகள் கொதிக்க வைக்கப்படுகிறது என்றும், இதன்மூலம் கிருமிகள் அழிவதோடு பாலிலுள்ள என்சைம்கள் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுவீடன் நாட்டு இயந்திரங்களைக் கொண்டு நவீன முறையில் தமிழ்நாட்டில் முதன்முதலாக டெட்ரா பாக்கில் நோய்க்கிருமிகள் போகாத வண்ணம் சுவையூட்டிய நறுமணப் பால் அடைத்து விற்பனைச் செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்திச் செய்யப்படும் பால் சுமார் 3 மாதம் வரை கெடாமல் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பால்பண்ணையை பார்வையிட்ட குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்.

பால் பாக்கெட் தயாரிக்கும் இடத்தில் பால் வாசனையுடன் துர்நாற்றமும் வீசுகிறது என்றும், இந்த இடத்தை சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு உத்தரவிடுகிறது என்றும், அதேபோல் பால்பாக்கெட் அடுக்கி வைக்கப்பட்டுள்ள Trays அசுத்தமாக உள்ளன என்றும், இவற்றை சுடுதண்ணீரால் கழுவி சுத்தப்படுத்த வேண்டுமென்றும் மேலும், குளிர்பதன கிடங்கிலுள்ள சுவர்கள் சிதலடைந்து காணப்படுகின்றன என்றும், இவற்றை சரிசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது என்றார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 20 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கிவந்த இந்த பால்பண்ணை தற்போது இலாபத்தில் இயங்க தொடங்கியுள்ளது என்றும், இதற்காக பாடுபட்டுவரும் தொழிலாளர்களில் பலர் 15, 20 ஆண்டுகாலமாக தற்காலிக பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் தங்களை நிரந்தர படுத்த வேண்டுமென்றும் கோரிக்கை வைத்து அரசின் ஆணைக்காக காத்திருக்கிறார்கள் என்றும், எனவே, குழுவின் கூட்டம் சென்னையில் கூடும்போது துறையின் செயலாளர் மற்றும் ஆவின் நிறுவன நிர்வாக இயக்குநர் ஆகியோரை அழைத்து இதுகுறித்து ஆய்வு செய்யும் என்றார்.

20. உறுதிமொழி எண். 145 / 2006, :– "சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி பகுதியில் 110கி.வோ. துணைமின் நிலையம் அமைப்பது குறித்து".

துணைமின் நிலையம் அமைந்திருக்கிற இடத்தினை பார்வையிடச் சென்ற குழுவினரை மேட்டூர் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் திரு.சுந்தரேசன் உள்ளிட்ட மின்சார வாரியத்தின் உயர்அதிகாரிகள் வரவேற்று துணைமின் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினர். மேட்டூர் சட்டமன்ற உறுப்பினரும் பொது நிறுவனங்களின் குழுத் தலைவருமான திரு.கோ.க. மணி, அவர்கள் குழுவுடன் கலந்துகொண்டார்.

துணைமின் நிலையத்தினை பார்வையிட்ட குழுத் தலைவர் கீழ்க்கண்டவாறு குறிப்புரைத்தார்.

இந்த துணைமின் நிலையத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.662.83 இலட்சம் என்றும் இதனால் 60 கிராமங்கள் பயன்படுகிறது என்றும் 16.11.2007 முதல் இந்த துணைமின் நிலையம் செயல்பட தொடங்கியுள்ளது என்றும், இந்த துணைமின் நிலையம் அமைக்கப்பட்ட பின்பு தடையில்லாத சீரான மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் குழுவிற்கு தகவல் தெரிவித்துள்ளார்கள் என்றும். மேலும் வருங்கால மின் பளுவை கருத்திற்கொண்டு 2–வது மின்மாற்றி பணி நடைபெற்று வருகின்றது என்றும், இந்த மின்மாற்றி 29.02.2008 முதல் செயல்பட தொடங்கும் என்றும் தெரிவித்துள்ளதால் இந்த துணைமின் நிலையத்தின் செயல்பாடு குறித்து குழு திருப்தி அடைகின்றது என்றார்.

21. உறுதிமொழி எண். 1070 / 2007, :– "சேலம் மாவட்டம் மேட்டூர் அனல்மின் நிலையத்திலிருந்து சாம்பல் நீர் வீணாவதை பாசனத்திற்கு திருப்பி விடுவது குறித்து".

மேட்டூர் அனல் மின்நிலையத்திற்கு சென்றடைந்த குழுவினரை மேட்டூர் மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் திரு.சுந்தரேசன் அவர்கள் வரவேற்று அனல்மின் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விவரங்களை அளித்தார்.

மேட்டுர் அனல்மின் நிலையத்தைப் பார்வையிட்ட குழுத் தலைவர் கீழ்கண்டவாறு குறிப்புரைத்தார்.

இந்த அனல்மின் நிலையத்தில் நாளொன்றுக்கு 21 மில்லியன் யூனிட் மின்சாரம் தயார் செய்யப்படுகிறது என்றும், ஒரு யூனிட் மின்சாரம் தயார் செய்வதற்கு 2 ரூபாய் செலவாகிறது என்றும் நுகர்வோருக்கு ஒரு யூனிட் மின்சாரம் 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றும் இதனால் மின்வாரியத்திற்கு நாளொன்றுக்கு 2 கோடி ரூபாய் இலாபம் கிடைக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த அளவிற்கு இலாபம் ஈட்டுகிற வகையில் இந்த அனல்மின் நிலையம் திறம்பட செயலாற்றி வருகின்றதற்கு இங்கு அரும்பாடுபட்டு உழைக்கும் பணியாளர்களுக்கு விருதுகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த மின்வாரியமும் அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரைச் செய்கிறது என்றார். அதேபோல ஒப்பந்த அடிப்படையில் நிறைய பணியார்கள் இங்கு பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்தி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றிட மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது என்றார். சிறந்த மின் உற்பத்திக்காகவும், சிறந்த நிர்வாகத்திற்காகவும் இந்திய அளவில் 6 முறை பதக்கங்களை வென்றுள்ள இந்த நிறுவனத்திற்கு குழுவின் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று குழுத்தலைவர் தெரிவித்தார்.

22. உறுதிமொழி எண். 313 / 2005. :– "மேட்டுர் அணையில் மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் மற்றும் வளர்ப்பு நிலையம் அமைப்பது குறித்து".

மேட்டுர் அணையின் அருகிலுள்ள மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தைப் பார்வையிடச் சென்ற குழுவினரை அந்நிலையத்தின் அதிகாரிகள் வாவேற்று மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினர்.

இந்த மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் 1938 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது என்றும், இங்கு வளர்க்கப்படும் கட்லா, ரோகு, மிருகால், கெண்டை, குல்கண்டு போன்ற சினை மீன்கள் மூலம் ஒவ்வொரு வருடமும்

இலட்சக்கணக்கான மீன் குஞ்சுகள் உற்பத்திச் செய்யப்பட்டு தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் இந்த ஆண்டின் இலக்கான 45 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி என்பது எய்தப்பட்டுள்ளது என்றும் குழுத் தலைவர் தெரிவித்தார். மேலும் இந்நிலையத்தை சுற்றி சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் நிலையத்திற்குள் போதிய மின் விளக்கு வசதிகள் செய்வதற்கும் மீன்வளத் துறையின் உதவி இயக்குநர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது என்றார்.

இந்த நிலையத்தில் 4 பணியாளர்கள் கடந்த 24 வருடகாலமாக பணியாற்றி வருகின்றார்கள் என்றும், இவர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்வும் அளிக்கப்படவில்லையென்றும், 3 மீன் பாதுகாவலர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது என்றும், இதற்கு 10 ஆம் வகுப்பு தேர்ச்சி மட்டுமே கல்வி தகுதி என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே, இங்கு பணியாற்றி வரும் 4 பணியாளர்களுக்கு உரிய பதவி உயர்வு அளிப்பது குறித்தும் நிரப்பப்படாமல் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவது குறித்தும் குழுவின் கூட்டம் சென்னையில் நடைபெறும் போது கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளை குழுமுன் நேரில் அழைத்து விளக்கம் பெற்றபின் அரசுக்கு குழு பரிந்துரை செய்யும் என்றார். அதற்கு முன்பாக இதுதொடர்பான கருத்துருவினை மீன்வளத் துறையின் உதவி இயக்குநர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது என்றார்.

பொதுக் குறிப்புரைகள்

6. ஆய்வுப் பயணங்களின் போது நடைபெறும் குழுக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

7. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய நேரத்தில் மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

8. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009.
29, ஏப்ரல் 2008.
சித்திரை 17,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்,
தலைவர்
அரசு உறுதிமொழிக் குழு.

கிருஷ்ணகிரி மாவட்டம்



இணைப்பு – 1

கிருஷ்ணகிரி தொகுதி மார்க்கண்டேய நதியில் இருந்து குப்பாச்சிப்பாறை, குந்தபள்ளி, பீமாண்டபள்ளி, நீர்வழி கால்வாய்யைத் தூர் எடுத்து பாசனத்திற்கு தண்ணீர் விடுதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	828 / 2003
4.	பொருள்	:	கிருஷ்ணகிரி தொகுதி மார்க்கண்டேய நதியில் இருந்து குப்பாச்சிப்பாறை, குந்தபள்ளி, பீமாண்டபள்ளி, நீர்வழி கால்வாயைத் தூர் எடுத்து பாசனத்திற்கு தண்ணீர் விடுதல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	18834
	நாள்	:	03.11.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. வெ. கோவிந்தராஜ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ... இப்பணியை முன்னுரிமை அடிப்படையில் சேர்த்து கால்வாயில் உள்ள தூரினை அகற்றி சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	இக்கால்வாய் தூர்வாரும் பணி சென்ற நிதி ஆண்டில் (2005–06) முறைசாரா நீர்பாசன ஆதாரங்கள் (Non System) பராமரிப்பு தலைப்பின் கீழ் அரசு ஒதுக்கீடு செய்த நிதியில் ரூ.3,00,000/– செலவில் செய்து முடிக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	04.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

ஒசூர் தொகுதி கெலவரப்பள்ளி அணைக்கட்டின் கால்வாய்களைச் செப்பனிடுதல் மற்றும் தூர் வாருதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	2
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	909 / 2003
4.	பொருள்	:	ஒசூர் தொகுதி கெலவரப்பள்ளி அணைக்கட்டின் கால்வாய்களைச் செப்பனிடுதல் மற்றும் தூர் வாருதல் குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	28.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கே. கோபிநாத்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் ... மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல் இந்தக் கால்வாய்களை செப்பனிடுவதால் 8000 ஏக்கர் நிலம் பயனடையும் என்று சொன்னால் அது உண்மையானால், நிச்சயமாக இந்த அரசு உடனடியாக அந்தக் கால்வாய்களை தூர்வாரி செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் வட்டம் – கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டம் கால்வாய்கள் புனரமைப்பு பணிகளுக்காக அரசாணை நிலை எண்.62/பொதுப்பணி (எஸ்.2) துறை, நாள்: 10.03.2005–ல் மொத்த மதிப்பீடு ரூ.175 இலட்சத்திற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு பாசனம் நடைபெறுகிறது. இதன்மூலம் மொத்தம் 9083 ஏக்கர் பயனடைகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	04.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் நகரத்திலுள்ள 5 கி.வாட் கொண்ட மின்மாற்றியை 8 கி.வாட் கொண்டதாக மாற்றுதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	3
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	369 / 2004
4.	பொருள்	:	கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் நகரத்திலுள்ள 5 கி.வாட் கொண்ட மின்மாற்றியை 8 கி.வாட் கொண்டதாக மாற்றுதல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	19837
	நாள்	:	31.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கே.பி. முனுசாமி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்துறை அமைச்சர் ... 8 எம்.வி.ஏக்கு உயர்த்தும் திட்டம் 10–வது பெருந்திட்டத்தின் 4–வது பகுதியில் பரிசீலனையில் உள்ளது.
8.	துறையின் பதில்	:	காவேரிப்பட்டினம் நகரத்தில் உள்ள 5 மெகாவாட் துணைமின் நிலையத்தில் உள்ள 5 எம்.வி.ஏ.மின்திறன் மாற்றியை 8 எம்.வி.ஏ. ஆக திறன் உயர்த்த வாரிய ஆணை எண்.4, நாள்: 07.01.2006–ல் ஒப்புதல் பெறப்பட்டு 8 எம்.வி.ஏ. திறன் மாற்றி 03.11.2007 அன்று இயக்கி வைக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	04.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் யானைகள் பயிர்களை மிதித்து நாசம் செய்வதால் 40 கி.மீ.க்கு solar fencing or trench போடுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	4
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	136 / 2005
4.	பொருள்	:	கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் யானைகள் பயிர்களை மிதித்து நாசம் செய்வதால் 40 கி.மீ.க்கு solar fencing or trench போடுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்	:	
	நாள்	:	10.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கே.வி. முரளிதரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஆர். வைத்தியலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ... தக்க நடவடிக்கை எடுக்கப்படும்
8.	துறையின் பதில்	:	2005–2006 ஆம் ஆண்டில் 15.50கி.மீ. தூரம் சூரிய மின் கம்பி வேலி அமைக்கும் பணி ரூ.24.80 லட்சத்தில் முடிக்கப்பட்டது. 2006–07ம் ஆண்டில் 26 கி.மீ. தூரம் சூரிய மின் கம்பி வேலி அமைக்கும் பணி ரூ.42.40 லட்சத்தில் முடிக்கப்பட்டது. 2007–08ம் ஆண்டு 20 கி.மீ. தூரம் சூரிய மின்கம்பி வேலி அமைக்க ரூ.32.00 லட்சம் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. நடப்பு ஆண்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. பிப்ரவரி 2008–க்குள் பணி முழுமையாக முடிக்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	04.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதிக்குட்பட்ட அக்கொண்டப்பள்ளி முதல் அனுசோனை வரையிலும், கெலமங்கலம் முதல் தேன்கனிக்கோட்டை வரையிலும் உள்ள தார்ச் சாலையை செப்பனிடுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	5
2.	துறையின் பெயர்	:	நெடுஞ்சாலைத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	299 / 2005
8.	துறையின் பதில்	:	அரசு உறுதிமொழி எண்.383/2004–ல் கேட்கப்பட்டுள்ள பகுதிகள் இரண்டும் சங்ககிரி (நெ) உட்கோட்டத்தின் மாவட்ட இதர சாலையான மூலப்பாதை–இருப்பாளி சாலை (வழி) சித்தூர் கி.மீ.6/4 (மேல் காடு கிராமம் – எல்லை கூட்டூர் கிராமச்சாலை) மற்றும் கி.மீ.7/4 (காளியம்மன் கோயில் வெற்றிலைக்காரன் காடு) உள்ள பகுதியாகும். மேற்கண்ட சாலையில் கி.மீ.6/4–ல் சிறிய தொய்வு சாலைகள் காணப்படுவதால் அதிக மழை பெய்யும் காலங்களில் மட்டும் இதில் வெள்ளம் குறுக்காக செல்கிறது. எனவே இப்பகுதியில் தற்பொழுது 2005–2006 ஆம் ஆண்டு வெள்ள நிவாரண நிதியின் கீழ் ரூ.1.00 லட்சத்திற்கு சிறு குழாய் பாலம் கட்டப்பட்டுள்ளது. கி.மீ.7/4–ல் உள்ள பகுதியில் வரையறுக்கப்பட்ட ஒடை குறுக்கீடு இல்லாததால் சிறுபாலம் எதுவும் தேவையில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள கூட்டுறவு பண்டகசாலையில் பணி வழங்கப்படாத மீதமுள்ள 4 பேருக்கு பணி வழங்க அரசு நடவடிக்கை எடுத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	41
2.	துறையின் பெயர்	:	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	460 / 2004
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்திலுள்ள கூட்டுறவு பண்டகசாலையில் பணி வழங்கப்படாத மீதமுள்ள 4 பேருக்கு பணி வழங்க அரசு நடவடிக்கை எடுத்தல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	4748
	நாள்	:	17.11.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. ஐ. கணேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ... 2 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 2 பேர்களுக்கு பணி வழங்குவது குறித்து பண்டகசாலையின் பணியாளர் திறன் மற்றும் துணை விதிகள் ஆகியவற்றை நிர்ணயித்த பின்னர் பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	கலைக்கப்பட்ட கொங்கணாபுரம் கூட்டுறவு பண்டகசாலையின் 4 பணியாளர்களில் திரு பி.டி. முத்துசாமி மற்றும் திரு.ஆர். மணி ஆகிய இருவர் மட்டும் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் அரசாணை எண்.டி) 9, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 26.04.2002–ன்படி விற்பனைப் பிரிவு உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு உள்ளார். திரு.சி.நல்லுசாமி, கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பணியமர்த்தப்பட்டு தற்போது பணிபுரிந்து

வருகிறார். ஆக நான்கு பேர்களில் மூன்று பேர்கள் தற்போது கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள ஒரு பணியாளரான திரு.எம். மகாலிங்கம், முன்னாள் இரவு காவலர் தனது 28.02.2006 ஆம் நாளிட்ட கடிதத்தில் 48 வயதில் வேலைக்கு சேர்ந்ததாகவும் தனது ஒய்வு தேதி 05.08.2002 பிற்பகல் எனவும் மேற்படி பண்டகசாலை 29.11.2000 அன்று கலைக்கப்பட்டதால் தான் இரவு காவலர் பணியில் இருந்து தானாகவே நின்று கொண்டதாகவும் தனக்கு சேர வேண்டிய நிலுவைச் சம்பளம் மற்றும் பிணை வைப்புத் தொகை ஆகியவற்றை 28.02.2006–ம் தேதியில் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். எனவே அன்னாருக்கு பணியிடம் வழங்கும் கேள்வி எழவில்லை.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 06.02.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் புறநோயாளி பிரிவு கட்டடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	42
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	229 / 2005
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் புறநோயாளி பிரிவு கட்டடம் கட்டுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... கட்டடம் கட்டப்படும்
8.	துறையின் பதில்	:	மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் புற நோயாளிகள் பிரிவு கட்டிடம், 2005–2006 ஆம் ஆண்டுக்கான பகுதி–2ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.43 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு பிப்ரவரி 2007 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடைப்பாடி ஒன்றியம், ஆடையூர் முதல் மதுரகாளியம்மன் கோயில் வரை உள்ள தார்ச்சாலையை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

1.	வரிசை எண்.	:	43
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	471 / 2005
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடைப்பாடி ஒன்றியம், ஆடையூர் முதல் மதுரகாளியம்மன் கோயில் வரை உள்ள தார்ச்சாலையை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.
5.	அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு,	:	
	நாள்	:	13.04.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஐ. கணேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ... ஒரு மாத காலத்தற்குள் அந்தப் பணியை அரசு நிறைவேற்றும்
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் முதல் மதுரகாளியம்மன் கோவில் வரை உள்ள 1.80 கி.மீ. சாலையானது பேருந்து போக்குவரத்து செல்ல இயலாது பழுதடைந்த நிலையில் இருந்ததால் 2006–2007 ஆம் ஆண்டு நபார்டு திட்டம் ஆர்.ஐ.டி.எப். XII திட்டத்தில் ரூ.14.238 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி சாலைப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாநகர், 5–வது பகுதி, அழகாபுரம், பெரியபுதூர் முருகாரன்காடு பகுதியில் உள்ள கிணற்றை தூர் வாரி சல்லடை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	44
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	549 / 2005
4.	பொருள்	:	சேலம் மாநகர், 5–வது பகுதி, அழகாபுரம், பெரியபுதூர் முருகாரன்காடு பகுதியில் உள்ள கிணற்றை தூர் வாரி சல்லடை அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வின எண்.	:	54151
	நாள்	:	22.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.மு. கார்த்தி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ... மேல் நடவடிக்கையில் உள்ளது
8.	துறையின் பதில்	:	சேலம் மாநகராட்சியின் அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.5–ல் உள்ள அழகாபுரம் பெரியபுதூர் முருகாரன்காடு என்ற பகுதியில் அமைந்துள்ள கிணறு தனியாருக்கு சொந்தமான கிணறு ஆகும். மேற்கண்ட கிணறு வற்றிய நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது. மேலும் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பே சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து பொது மக்கள் யாரும் உபயோகப்படுத்தாத நிலையில், மேற்படி கிணற்றில் குப்பை கூழங்கள் மற்றும் தேவையற்ற பொருட்களால் நிரப்பப்பட்டுள்ளது. எனவும், மேற்படி கிணறு அமைந்துள்ள இடம் தனியாருக்கு சொந்தமான இடத்தில் உள்ளதால் இப்பணியினை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள இயலாது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

சேலம் மாநகர், 12–வது பகுதி, மணக்காடு அரச மரத்தடியில் உள்ள பொது கிணற்றை தூர் வாரி சல்லடை ஏற்படுத்தும் பணியை மேற்கொள்ளுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	45
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	550 / 2005
4.	பொருள்	:	சேலம் மாநகர், 12–வது பகுதி, மணக்காடு அரச மரத்தடியில் உள்ள பொது கிணற்றை தூர் வாரி சல்லடை ஏற்படுத்தும் பணியை மேற்கொள்ளுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	54163
	நாள்	:	22.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.மு. கார்த்தி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்
			... வரும் நிதியாண்டில் (2005–2006) மேற்கொள்ளப்பட உள்ளது
8.	துறையின் பதில்	:	சேலம் மாநகராட்சியின் அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.12–ல் மணக்காடு என்ற பகுதியில் அரச மரத்தடியில் உள்ள பொது கிணற்றை தூர்வாரி சல்லடை அமைக்க மதிப்பீடு ரூ.3.85 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு இப்பணியை மேற்கொள்ள வி.ஜி.கன்ஸ்ரக்சன் என்ற ஒப்பந்ததாரருக்கு 10.09.2007–ல் பணி ஆணை வழங்கப்பட்டு, இப்பணி 20.12.2007 அன்று பணி முடிக்கப்பட்டு மேற்படி பொது கிணற்றில் மின்மோட்டார் பொருத்தப்பட்டு தண்ணீரை பொது மக்களது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம் கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, ஆர்.சி.செட்டிப்பட்டி அருந்ததியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	46
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	554 / 2005
4.	பொருள்	:	சேலம் மாவட்டம் கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, ஆர்.சி.செட்டிப்பட்டி அருந்ததியர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்குவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	10660
	நாள்	:	22.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.மே.ப. காமராஜ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ... குடிநீர் வழங்கப்படும்
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கோட்ட மேட்டுப்பட்டி ஊராட்சி, ஆர்.சி. செட்டிப்பட்டி அருந்ததியர் காலனியில் தற்போது 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நீர் ஏற்றப்பட்டு, சீராக பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சிறு மின்விசை பம்பு மற்றும் 3 கைப்பம்புகள் அமைக்கப்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் தட்டுப்பாடு எதுமில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஈஸ்வரன் கோயில் சிற்பங்களை பாதுகாப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	47
2.	துறையின் பெயர்	:	தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	597 / 2005
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஈஸ்வரன் கோயில் சிற்பங்களை பாதுகாப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	73161
	நாள்	:	26.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஐ. கணேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ... பாதுகாக்கப்படும்
8.	துறையின் பதில்	:	திருக்கோயிலின் மகா மண்டபத்தில் உள்ள அழகிய சிற்ப வேலைப்பாடுடன் கூடிய தூண்களில் 6 தூண்களை சுற்றியும் இரும்பு வலை போடப்பட்டு பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் சிற்பங்களுக்கு எந்த சேதாரமுமின்றி பாதுகாப்பாகவும், பொது மக்கள் பார்வைக்கு ஏற்றவாறும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் மண்ணில் புதைந்து கிடக்கும் சிற்பங்களை எடுத்து பராமரிப்பது மற்றும் செயல் அலுவலர் நியமிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	48
2.	துறையின் பெயர்	:	தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	598 / 2005
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் மண்ணில் புதைந்து கிடக்கும் சிற்பங்களை எடுத்து பராமரிப்பது மற்றும் செயல் அலுவலர் நியமிப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	73161
	நாள்	:	26.09.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.மே.ப. காமராஜ்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ... ஆராய்ச்சிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் .... செயல் அலுவலர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்
8.	துறையின் பதில்	:	மண்ணில் புதைந்து கிடந்த சிற்ப வேலைப்பாடுகள் உடைய சிற்பங்கள் மற்றும் கல் தூண்கள் தோண்டி எடுக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், ஏற்காடு உயிரியல் பூங்காவிற்கு பயணிகள் செல்ல முடியாத ஒரு நிலையிலே இருக்கும் மண் சாலைகளையெல்லாம் மாற்றி புதிய தார் சாலைகளாக அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	49
2.	துறையின் பெயர்	:	சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	35 / 2006
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், ஏற்காடு உயிரியல் பூங்காவிற்கு பயணிகள் செல்ல முடியாத ஒரு நிலையிலே இருக்கும் மண் சாலைகளையெல்லாம் மாற்றி புதிய தார் சாலைகளாக அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	49285
	நாள்	:	18.01.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.செ. வெங்கடாஜலம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஆர் வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ... உறுப்பினருடைய கேள்விக்கை பரிசீலிக்கப்படும்
8.	துறையின் பதில்	:	ஏற்காட்டில் உள்ள மான்பூங்காவில் ஏற்கனவே தார்சாலை உள்ளது. அடிவாரம் பகுதியிலுள்ள குரும்பட்டி உயிரியல் பூங்காவிலுள்ள பழைய மண்சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, 2006–2007 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற தொகையினைக் கொண்டு, தார்ச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாநகரில் அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்கள் அம்மாபேட்டை காவல் நிலையம் வழியாக இயக்குதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	50
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	70 / 2006
4.	பொருள்	:	சேலம் மாநகரில் அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்கள் அம்மாபேட்டை காவல் நிலையம் வழியாக இயக்குதல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண், துணை வினா	:	38773
	நாள்	:	21.01.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.செ. வெங்கடாஜலம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் ... உரிய நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	சேலம் மாநகரில் அம்மாபேட்டை வழியாக இயக்கப்பட்டு வரும் நகரப்பேருந்துகள் அனைத்தும் அம்மாப்பேட்டை காவல் நிலையம் வழியாகவே இயக்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

சேலம் மாநகர் 5–வது பகுதி மிட்டாபுதூரிலுள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மேல் தளம் புதுப்பிக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	51
2.	துறையின் பெயர்	:	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
3.	உறுதிமொழி எண்.	:	139 / 2006
4.	பொருள்	:	சேலம் மாநகர் 5–வது பகுதி மிட்டாபுதூரிலுள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மேல் தளம் புதுப்பிக்கப்படுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	54154
	நாள்	:	27.01.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.மு. கார்த்தி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்
			... பரிசீலனையில் உள்ளது
8.	துறையின் பதில்	:	சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.5ல் மிட்டாபுதூரில் அமைந்துள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டிக்கொடுக்க அப்பகுதி பொது மக்களும் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்களும் கோரிக்கை விடுத்திருந்தனர்.
			அதன் அடிப்படையில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் இருந்த ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்ட கல்வி நிதியின் கீழ் மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்து உரிய அனுமதிகள் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி பணியின் கீழ் 15.30மீ x 9.00மீ அளவில் புதியதாக கான்கீரிட் கூரையிலான தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டிடம் கட்டப்பட்டது. இக்கட்டிடத்தின் தரை தளத்தில் மூன்று வகுப்பறைகள் மற்றும் முதல் தளத்தில் மூன்று வகுப்பறைகள் என ஆறு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

இப்புதிய கூடுதல் வகுப்பறை கட்டிடம் 10.12.2007 அன்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு தற்போது பள்ளிக் குழந்தைகளின் பயன்பாட்டில் உள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 06.02.2008

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேலத்தில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக உதவியுடன் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	52
2.	துறையின் பெயர்	:	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	508 / 2006
4.	பொருள்	:	சேலத்தில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக உதவியுடன் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ... நடப்பாண்டில் தொடங்கப்படும்
8.	துறையின் பதில்	:	சேலத்தில் இயங்கிவரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் 23.01.2007 முதல் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எய்ட்ஸ் Test-க்காக இரத்தப் பகுப்பு மையத்தினை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	53
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	607 / 2006
4.	பொருள்	:	சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எய்ட்ஸ் Test-க்காக இரத்தப் பகுப்பு மையத்தினை அமைப்பது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் .... அமைக்கப்படும்
8.	துறையின் பதில்	:	எய்ட்ஸ் டெஸ்டிற்கான இரத்த பகுப்பு மையம் ஏப்ரல்-2001 முதல் இயங்கி வருகிறது. CD4-ஆய்வகம் ஆகஸ்ட்-2006 முதல், நாளது தேதி வரை இயங்கிவருகிறது. எய்ட்ஸ் நோய் கண்டுபிடிப்பு, குழந்தைகளுக்கு நோய் பாதிப்பு இருக்கிறதா என்று கண்டறியும் சோதனை மையம் ஆகியவை நல்ல முறையில் இயங்கி வருகிறது. இரத்த பகுப்புமுறை (Component Therapy) ஆய்வகத்திற்கான முன்மொழிவுகள் ரூ.22 இலட்சங்கள் மதிப்பீட்டில் (NACO) அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்டு அரசின் ஒப்பளிப்பு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி புதுவேலங்குளம், வீரனூர் நங்கவல்லி மற்றும் கொளத்தூர் ஒன்றியத்தின் சில ஊர்களிலே குறைந்த மின் அழுத்தம் இருக்கக்கூடிய பகுதிகளில் மின்மாற்றிகளை உருவாக்கவும் கம்பிகளை மாற்றவும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	54
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	640 / 2006
4.	பொருள்	:	மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி புதுவேலங்குளம், வீரனூர் நங்கவல்லி மற்றும் கொளத்தூர் ஒன்றியத்தின் சில ஊர்களிலே குறைந்த மின் அழுத்தம் இருக்கக்கூடிய பகுதிகளில் மின்மாற்றிகளை உருவாக்கவும் கம்பிகளை மாற்றவும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	1841
	துணை வினா	:	
	நாள்	:	18.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஜி.கே. மணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் ... மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியும் தேர்ந்தெடுக்கப்படும்
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம் மேட்டூர் தொகுதியைச் சார்ந்த கோனூர் ஊராட்சிக்குட்பட்ட புதுவேலங்களம் (புதுவேலமங்கலம்) வீரனூர் ஆகிய கிராமங்களுக்கு மூன்று மின்மாற்றிகள் 63 கே.வி.ஏ.-ல் இருந்து 100 கே.வி.ஏ. ஆக திறனுயர்த்தப்பட்டும் நங்கவள்ளி பகுதியில் ஒரு மின்மாற்றியின் திறனுயர்த்தப்பட்டும் மேலும் கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள (மூலக்காடு, பூமனூர் செட்டியூர் வரப்பள்ளத்தூர், கப்பிரமணியபுரம், காவேரிபுரம் சவேரியார்பாளையம்) என்ற இடங்களில் 7 மின்மாற்றிகள் 63 கே.வி.ஏ.ல் இருந்து 100 கே.வி.ஏ ஆக திறனுயர்த்தப்பட்டும் மற்றும் அதற்குத் தேவையான அதிகத்திறனுடைய மின்கம்பிகள் மாற்றியும் நடவடிக்கை எடுக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

ஆத்தூரிலிருந்து திருப்பதிக்கும், பழனிக்கும் சொகுசு பஸ் இயக்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	55
2.	துறையின் பெயர்	:	போக்குவரத்துத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	652 / 2006
4.	பொருள்	:	ஆத்தூரிலிருந்து திருப்பதிக்கும், பழனிக்கும் சொகுசு பஸ் இயக்குவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	2000
	நாள்	:	18.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.எம்.ஆர். சுந்தரம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. கா.நா. நேரு. போக்குவரத்துத் துறை அமைச்சர் ... இந்த அரசு முயற்சி எடுக்கும்
8.	துறையின் பதில்	:	1. தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களுக்கு இடையே பேருந்துகள் இயக்க 28.01.2008 அன்று ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதில் ஆத்தூர்–திருப்பதி வழித்தடமும் அடங்கியுள்ளது. இரண்டு மாநிலங்களிலும் அரசாணை வெளிவந்தவுடன் பேருந்துகள் இயக்கப்படும். 2. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் மூலம் ஆத்தூர்–பழநி வழித்தடத்தில் 05.05.2007 முதல் தினசரி இரண்டு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் கால்நடை காப்பீட்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் அதிக பால் கறவை திறன் கொண்ட பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	56
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	764 / 2006
4.	பொருள்	:	சேலம் மாவட்டத்தில் கால்நடை காப்பீட்டு திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் அதிக பால் கறவை திறன் கொண்ட பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான கால்நடை, பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – பால்வளம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	19.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர் ... பசு மற்றும் எருமைகள் காப்பீடு செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	2006–2007 நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் 8000 கறவைகளுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் 8000 கறவைகளுக்கும் காப்பீடு செய்ய வேண்டுமென்று குறிபீடு நிர்ணயம் செய்யப்பட்டது. 2006–2007 நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் 10,821 கறவைகளுக்கும், நாமக்கல் மாவட்டத்தில் 9,345 கறவைகளுக்கும், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியத்தில் பசும்புல் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 100 சதவிகிதம் மானிய நிதியுதவியுடன் பசும்புல் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	57
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	765 / 2006
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியத்தில் பசும்புல் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் 100 சதவிகிதம் மானிய நிதியுதவியுடன் பசும்புல் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான கால்நடை, பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – பால்வளம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	19.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர் ... பசும்புல் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்
8.	துறையின் பதில்	:	பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மானிய விலையில் கோ–3 தீவன கரணைகள், ஆயிரம் கரணைகள் ரூ.80/– என்ற விலையில் இவ்வொன்றியத்தின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், சூபாபுல், தட்டை பயறு, புரதசத்து நிறைந்த பசுந் தீவனத்தை கோ–3, தீவனப்புல் மற்றும் தீவன சோளத்துடன் ஊடு பயிராக பயிர் செய்து அளிக்கும் விபரங்கள் பற்றிய பயிற்சியும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், தீவன விதைகள், செயல் விளக்கத்திற்கு மினிகிட் முதலியன இலவசமாக வழங்கப்படுகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் தேசிய கால்நடை காப்பீட்டு திட்டத்தினை நடப்பாண்டில் செயல்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	58
2.	துறையின் பெயர்	:	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	892 / 2006
4.	பொருள்	:	சேலம் மாவட்டத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் தேசிய கால்நடை காப்பீட்டு திட்டத்தினை நடப்பாண்டில் செயல்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான கால்நடை, பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை – பால்வளம் மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	22.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திருமதி. பி. கீதாஜீவன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ... நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டில் (2007–2008) 10,000 கால்நடைகள் காப்பீடு செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் செவித்திறன் குறையுடையோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பேசுவதற்கு பயிற்சி அளிக்க, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு மையம் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	59
2.	துறையின் பெயர்	:	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	903 / 2006
4.	பொருள்	:	சேலம் மாவட்டத்தில் செவித்திறன் குறையுடையோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பேசுவதற்கு பயிற்சி அளிக்க, மற்ற குழந்தைகள் பயிலும் (Regular Schools) பள்ளிகளில் கற்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு மையம் ஏற்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	22.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை ஆலடி அருணா, சமூக நலத்துறை அமைச்சர் ... ஒரு மையம் ஏற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம், சேலம் மாநகரத்தில் அருணாசல ஆசாரி தெருவில் மாநகராட்சி பள்ளி வளாகத்தில் பிப்ரவரி 2006–ல் மையம் திரு.சுப்புராஜ், டாக்டர் டேவிஸ், காது கேளாதோர் பள்ளி, என்ற தன்னார்வு தொண்டு நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்டு அரசு நிதி உதவியோடு மையம் நடைபெற்று வருகிறது. பிப்ரவரி மற்றும் மார்ச் 2006 மாதங்களுக்கு ரூ.85,000/–மும், ஏப்ரல் 2007 முதல் மார்ச் 2008 முடிய உள்ள இந்நிதியாண்டிற்கு ரூ.2,58,000/– இம்மையம் செயல்பட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டு மையம் நடைபெற்று வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

தலைவாசல் தொகுதி, 74 கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த குக்கிராமமான வலசகல்பட்டி ஏரியில் படகுத்துறை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	60
2.	துறையின் பெயர்	:	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1137 / 2006
4.	பொருள்	:	தலைவாசல் தொகுதி, 74 கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த குக்கிராமமான வலசகல்பட்டி ஏரியில் படகுத்துறை அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	1094
	நாள்	:	30.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.கு. சின்னதுரை
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர் ... மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கலந்து பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, கிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த வலசகல்பட்டி ஏரியில் படகுத்துறை அமைப்பது குறித்து தல ஆய்வு செய்யப்பட்டது. ஆத்தூரிலிருந்து 17 கி.மீ. தொலைவிலும், கெங்கல்லியிலிருந்து 11 கி.மீ. தொலைவிலும், வலசகல்பட்டி பிரிவிலிருந்து 1.5 கி.மீ. தொலைவிலும், அமைந்துள்ளது. இந்த ஏரியானது பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. ஏரியின் ஆழம் 6.60 மீ. பரப்பளவு 102.10 ஏக்கர். நீர் பிடிப்புப்பகுதி 38.83 ச.கி.மீ. இந்த ஏரிக்கு நீர்வரத்து பச்சை மலையில் இருந்து வருகிறது. மழைக்காலங்களில் மட்டுமே நீர் அதிகமாக இருக்கும். எனவே, வலசகல்பட்டி ஏரியில் படகுத்துறை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மூலமாக சுற்றுலாத் துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கடித நகல் இணைப்பு)
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம் ஆத்தூரிலே உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	61
2.	துறையின் பெயர்	:	வணிகவரி மற்றும் பதிவுத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1286 / 2006
4.	பொருள்	:	சேலம் மாவட்டம் ஆத்தூரிலே உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	4418
	துணை வினா		
	நாள்	:	07.12.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.எம்.ஆர். சுந்தரம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
			... கோரிக்கை பரிசீலிக்கப்படும்
8.	துறையின் பதில்	:	அலுவலக மராமத்துப் பணிக்கு ரூ.9,35,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மராமத்துப்பணி முடிக்கப்பட்டு புதியதாக விஸ்தரிக்கப்பட்ட கட்டடத்தில் அலுவலகம் தற்போது செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டிக்கும், நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே அணையின் தடுப்பை இரவு நேரத்திலும் திறப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	62
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	53 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டிக்கும், நெருஞ்சிப்பேட்டைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே அணையின் தடுப்பை இரவு நேரத்திலும் திறப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	6957
	நாள்	:	24.01.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.வை. காவேரி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் ... இரவு பகலாக செயல்படும்.
8.	துறையின் பதில்	:	மாண்புமிகு மின்துறை அமைச்சர் உத்தரவின் பேரில் பொது மக்கள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்களில் செல்வோரை கதவணை மின் நிலையம் 2–ம் பாலத்தின் வழியாக எந்நேரமும் சென்றுவர 21.05.2007 முதல் அனுமதிக்கப்படுகிறார்கள்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுகாட்டூர் பகுதி கொங்குப்பட்டி வரை கிராம இணைப்பு சாலை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	63
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	183 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுகாட்டூர் பகுதி கொங்குப்பட்டி வரை கிராம இணைப்பு சாலை அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	3803
	நாள்	:	29.03.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.அ. தமிழரசு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ... நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், குண்டுர் காட்டூர் பகுதியிலிருந்து கொங்குப்பட்டி வரை 800 மீ. நீளமுள்ள இணைப்புச்சாலை அமைக்க ரூ.2.00 இலட்சம் மதிப்பீடாகும். ஆனால் தற்பொழுது போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதால், மேற்படி பணியினை எடுத்துச் செய்ய இயலாத நிலை உள்ளது. *குழுத் தலைவர்:–* திட்ட அலுவலர், இதற்கான நிதியை ஒதுக்கி இன்றே பணிகளை ஆரம்பித்து விடுவதாக சொல்லியிருக்கிறார்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சியில் இருளர் காலனி முதல் முள் காடு பகுதி வரை நாரணம்பாளையம் ஊராட்சி அண்ணாநகர் பகுதி மயானம் செல்லும் பாதைகளை மண் சாலையாக அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	64
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	184 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சியில் இருளர் காலனி முதல் முள் காடு பகுதி வரை நாரணம்பாளையம் ஊராட்சி அண்ணாநகர் பகுதி மயானம் செல்லும் பாதைகளை மண் சாலையாக அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	3804
	நாள்	:	29.03.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.அ. தமிழரசு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ... நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	1. காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி ஊராட்சியில் இருளர் காலனி முதல் முள்ளான்காடு பகுதி வரை உள்ள 600 மீ. நீளம் 2003-2004 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் மண்சாலை அமைக்கப்பட்டுவிட்டது. 2. ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சி, அண்ணாநகர் மயானத்திற்கு செல்லும் 300மீ. பாதையினை 2006-2007 ஆம் நிதியாண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலையாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலே பல கிராமங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாதது குறித்து.

1.	வரிசை எண்.	:	65
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	387 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலே பல கிராமங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாதது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண், துணை வினா	:	14581
	நாள்	:	10.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஜி.கே. மணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்
			... முதல் வேலையாக இந்த பட்டா கொடுக்கிற வேலையைதான் அவர்கள் கருத வேண்டும்.
8.	துறையின் பதில்	:	மேட்டூர் வட்டம், மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்கு உள்ளடங்கிய கிராமங்களில் அரசாணை எண்.854, வருவாய்த்துறை, நாள்: 31.12.2006–ன்படி ஆட்சேபனை உள்ள மற்றும் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு அரசின் ஒரு முறை மற்றும் செயல்படுத்திய திட்டத்தின் கீழ் பத்து கிராமங்களில் 116 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் மேட்டூர் சட்டமன்ற தொகுதியில் 9 கிராமங்களில் (மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெற்று) 134 நபர்களுக்கு பட்டா வழங்க தயாராக உள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 9 கிராமங்களில் 124 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க கோப்புகள் வட்ட அலுவலகத்தில் ஆய்வில் உள்ளது.

சாதாரண திட்டத்தின்கீழ் இரண்டு கிராமங்களில் 21 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதனை தவிர மேட்டூர் தொகுதியில் 7 கிராமங்களில் 131 நபர்களுக்கு முன்மொழிவுகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளது. மேலும், மேட்டூர் நகராட்சி பகுதியில் நத்தம் என பாகுபாடு செய்யப்பட்ட இடத்தில் 223 நபர்களுக்கு ஒரு முறை மற்றும் செயல்படுத்திய திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்க பணி நடைபெற்று வருகிறது. மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகராட்சி பகுதியில் பெரும்பாலான குடியிருப்புகள் பொதுப்பணித்துறை மற்றும் வாய்க்கால் ஆகிய இடங்களில் உள்ளதால் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுபடி வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது. மேலும், மேட்டூர் அணை மற்றும் வாய்க்கால் பயன்பாட்டிற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பொதுப்பணித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அந்த நிலங்களில் வீடுகள் கட்டப்பட்டு குடியிருந்து வருகிறார்கள். அந்த வீடுகளுக்கு பொதுப்பணித் துறையின் ஒப்புதல் கிடைக்காததால் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது. மேட்டூர் நகராட்சி பகுதியில் குடியிருந்து வரும் நபர்களில் பெரும்பாலானவர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வருவதால் அரசு விதிமுறைகளின் படி பட்டா வழங்க இயலாது. அரசாணை எண்.711, வருவாய்த்துறை, நாள்: 10.11.2007–ன்படி வீட்டுமனைப்பட்டா வழங்க வருமான வரம்பு நீக்கப்பட்டு விட்டதால் வீட்டுமனைப்பட்டா வழங்குவது சிறப்பு இனமாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வு செய்யப்பட்ட நாள் : 06.02.2008

குழுவின் கருத்து : படித்துப் பதிவுச் செய்யப்பட்டது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரப் பகுதியில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை புதுமைப்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	66
2.	துறையின் பெயர்	:	வருவாய்த் துறை
3.	உறுதிமொழி எண்.	:	477 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரப் பகுதியில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை புதுமைப்படுத்துதல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	5893
	நாள்	:	13.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.எம்.ஆர்.சுந்தரம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத்துறை அமைச்சர் ... அரசு பரிசீலிக்கும்.
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தை புதுமைப்படுத்தி தருவது தொடர்பாக முன்மொழிவுகள் ஏதும் அரசுக்கு அனுப்ப பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. 2006-2007 ஆம் ஆண்டில் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கூரை மற்றும் தரை டைல்ஸ் தளம் ரூ.3,00,000/- மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் மேலும் வட்டாட்சியர் அலுவலகம் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது.

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம், இந்திராநகர், அருந்ததியர் காலனி பகுதி அருகில் மின்மாற்றி அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	67
2.	துறையின் பெயர்	:	எரிசக்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	782 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்துநாயக்கன்பட்டி கிராமம், இந்திராநகர், அருந்ததியர் காலனி பகுதி அருகில் மின்மாற்றி அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	11436
	நாள்	:	25.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.அ. தமிழரசு
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் ... ஒருமுனை மின் கம்பிகளை மும்முனை கம்பிகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
8.	துறையின் பதில்	:	7 இடைநீள (7SPAN) ஒரு முனை மின் கம்பிகளை மும்முனை மின் கம்பிகளாக மாற்றும் பணி 06/2007-ல் முடிக்கப்பட்டு விட்டது. தற்போது கடைக்கோடி மின்னழுத்தம் 190 வோல்டில் இருந்து 220 வோல்டாக முன்னேற்றம் அடைந்துள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

சேலம் காவல் சரகத்தில் அமைச்சுப் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	68
2.	துறையின் பெயர்	:	உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	836 / 2007
4.	பொருள்	:	சேலம் காவல் சரகத்தில் அமைச்சுப் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு முதலமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் ... புதிதாக உருவாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு ஆணை எண்.920, உள் (காவல்–5) துறை, நாள்: 15.06.2007–ன்படி கீழ்க்கண்ட அமைச்சுப் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

முதுநிலை நிர்வாக அதிகாரி	1
கண்காணிப்பாளர்கள்	3
உதவியாளர்கள்	4
இளநிலை உதவியாளர்கள்	5
(தட்டச்சர் உட்பட) சுருக்கெழுத்தர்	1
அலுவலக உதவியாளர்	2
மொத்தம்	16

9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது.

இணைப்பு – II

குழுவின் பரிந்துரை

சேலம் மாவட்டம், எடப்பாடி தெகுதி ஏகாபுரம் மாரியம்மன் கோவில் முதல் கோட்டமேடு வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	189 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், எடப்பாடி தெகுதி ஏகாபுரம் மாரியம்மன் கோவில் முதல் கோட்டமேடு வரை உள்ள மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	7666
	நாள்	:	29.03.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.வை. காவேரி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் ... நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம் ஏகாபுரம் மாரியம்மன் கோயில் முதல் கோட்டைமேடு வரையுள்ள 0/0–0/4 கி.மீ. நீளமுள்ள ஜல்லிச்சாலையை ஓரடுக்கு கப்பிசாலை அமைத்து தார்சாலையாக மாற்ற ரூ.4 இலட்சம் மதிப்பீடாகும். ஆனால், தற்போது போதிய நிதி ஆதாரம் இல்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	06.02.2008
10.	குழுவின் பரிந்துரை	:	முன்னுரிமை அடிப்படையில் இந்த பணிக்கு நிதி ஒதுக்கி சாலை அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, வனவாசி பேரூராட்சியில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	2
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	519 / 2007
4.	பொருள்	:	சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, வனவாசி பேரூராட்சியில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	5854
	நாள்	:	16.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஜி.கே. மணி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ... மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல இயற்கையாகவே வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி கிடைத்தவுடன் பரிசீலித்து வேண்டியதை செய்து கொடுப்போம்.
8.	துறையின் பதில்	:	சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் வனவாசி பேரூராட்சியில் ஒரு துணை சுகாதார நிலையம் உள்ளது. வனவாசி துணை சுகாதார நிலையத்தின் மக்கள் தொகை 6287 ஆகும். வனவாசி துணை சுகாதார நிலையத்திற்குட்பட்ட குக்கிராமங்கள்

1	வனவாசி	2466
2	பி. வனவாசி	713
3	புதுப்பேட்டை	598
4	வனவாசி கிழக்கு	2510
	மொத்தம்	6287

வனவாசி துணை சுகாதார நிலைய செவிலியர் இப்பகுதி மக்களுக்கு தடுப்பூசிப் பணிகள், கர்ப்பகால கவனிப்பு, பிரசவம் பார்த்தல், சிறு சிறு உபாதைகளுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற பணிகள் செய்து வருகிறார்.

1	வனவாசியிலிருந்து – நங்கவள்ளி வட்டார ஆரம்ப சுகதார நிலையம்	– 2 கி.மீ.
2	வனவாசியிலிருந்து – அரசு மருத்துவமனை ஜலகண்டாபுரம்	– 6 கி.மீ.
3	வனவாசியிலிருந்து – மாவட்ட தலைமை மருத்துவமனை, மேட்டூர்	– 22 கி.மீ.
4	வனவாசியிலிருந்து – அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்	– 36 கி.மீ.

அரசு விதிமுறைகளின்படி புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகையும், மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகையும் இருத்தல் வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்படும் கிராமத்திற்கு சுற்றுவட்டாரத்தில் 8 கி.மீ. தொலைவிற்கு மேல் மருத்துவ வசதிகள் இருத்தல் வேண்டும்.

எனவே, அரசு விதிகளின்படி மேட்டூர் தொகுதியில் வனவாசி பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 06.02.2008

10. குழுவின் பரிந்துரை : மறு ஆய்வு செய்து வனவாசி பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு 3

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

17.8.2006	சென்னை
1.9.2006	சென்னை
5.12.2006	சென்னை
12.12.2006 13.12.2006	மதுரை திண்டுக்கல்
2.1.2007 முதல் 11.1.2007 வரை	வடமாநிலங்களில் ஆய்வுப்பயணம் அந்தமான்–நிக்கோபர், கொல்கத்தா, புதுதில்லி, ஆக்ரா, அமிர்தசரஸ் மற்றும் மும்பை
9.4.2007	சென்னை
23.4.2007	சென்னை
13.6.2007	சென்னை
12.7.2007 13.7.2007	கோயம்புத்தூர்
14.7.2007	நீலகிரி
2.8.2007 3.8.2007	சென்னை
16.8.2007 17.8.2007 18.8.2007	காஞ்சிபுரம் விழுப்புரம் கடலூர்
6.9.2007 7.9.2007	சென்னை
27.9.2007 28.9.2007	வேலூர்
29.9.2007	திருவண்ணாமலை
27.10.2007	சென்னை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

30.10.2007 31.10.2007	சென்னை
12.11.2007	கன்னியாகுமரி
13.11.2007 14.11.2007	திருநெல்வேலி
26.11.2007 27.11.2007	சென்னை
18.12.2007	தூத்துக்குடி
19.12.2007	விருதுநகர்
20.12.2007	மதுரை
07.01.2008 08.01.2008	சென்னை
29.01.2008	சென்னை
04.02.2008	திருவ்ணாகிரி
05.02.2008	தருமபுரி
06.02.2008	சேலம்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS